இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள் கொடைகளையும் திரும்பப் பெற்றுக்கொள்வதில்லை. ஒரு காலத்தில் நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தீர்கள்; இப்பொழுது அவர்கள் கீழ்ப்படியாமல் இருப்பதால், நீங்கள் கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். அதுபோல, இக்காலத்தில் நீங்கள் இரக்கத்திற்கு உரியவர்களாக இருக்கிறீர்கள்; அவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களும் விரைவில் இரக்கம் பெற்றுக் கொள்வார்கள்.
உரோ 11:29-32

# லெபனானுக்கு கோலாலம்பூர் மாமாறை மாவட்டம் நிதியுதவி - பேராயர் வழங்கினார்

**கோலாலம்பூர்**: கடந்த 4, ஆகஸ்டு 2020-ல் மேற்கு ஆசிய நாடான லெபானின் தலைநகர் பெய்ரூட் நகரில் பயங்கர சத்த்ததுடன் மிகப்பெரிய வெடிப்பு சம்பவம் நடந்தது. இந்த வெடிப்பில் 78 பேர் பலியாகியுள்ளனர். 1,000 மேற்பட்டோர் படுகாய மடைந்துள்ளனர்.

வெடி விபத்து நடந்த இடத்தில ஏராளமான கட்டடங்கள் குலுங்கின. நகரமே புகை மண்டலமாக மாறியது. ஏராளமான கட்டடங்கள் சேதமடைந்தன. குண்டு வெடித்த நிகழ்வு வீடியோவாக. டுவிட்டரில் வெளியாகின..

ஏற்கனவே லெபனானில், ஷியா மற்றும் சன்னி பிரிவினர் இடையே அடிக்கடி மோதல்களும் தாக்குதல்களும் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர். இந்த சூழ்நிலையில் சமீபத்தில் நடந்த மிகப்பெரிய வெடிப்பு சம்பவம் நகரையே அதிர வைத்துள்ளது.

இந்த பெய்ரூட் பயங்கர நிகழ்வைத் தொடர்ந்து



பெய்ரூட் நகரில் நிகழ்ந்த வெடிப்பில் அழியும் நகரம்

அனைத்துலகச் சமூகத்தின் அழைப்பின் பேரில் நிதியுதவி வழங்கி நிலைமையச் சீர் செய்ய உலக நாடுகளும் பொது அமைப்புகளும், நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் அனைத்துலகச் சமூகத்தின் முறையீட்டுக்குப் பதிலளிக்கும் விதமாக, பேராயர் மாமறைமறைமாவட்டத்தின் பேரிடர் நிதியிலிருந்து RM50,000.00-யை வழங்கினார்.

பெய்ரூட் துறைமுகத்தில் 2020 ஆகஸ்ட் 4 ஆம் தேதி ஏற்பட்ட இந்த வெடிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான நிவாரணம் தேவை. இந்த வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் லெபனான் மக்களுக்கும் இறைவேண்டல் செய்ய பேராயர் அனைத்து விசுவாசிகளையும் கேட்டுக்கொள்கிறார். துயர் துடைப்பு நமது மனிதநேயப் பணி என்பதை நினைவூட்டினார் பேராயர்.

## ஜப்பானில் அணுகுண்டு தாக்குதல் 75-ஆம் ஆண்டு நிறைவு

**வத்திக்கான்**: ஜப்பானில் அமெரிக்காவின் அணுகுண்டு தாக்குதலின் 75-ஆம் ஆண்டு நினைவைக் கடைப்பிடிக்கும் ஹிரோஷிமா நகர மக்களுக்கு, குறிப்பாக, இந்தத் தாக்குதலிலிருந்து தப்பித்து, இன்றுவரை வாழும் மக்களுக்கு, "என் இதயம் நிறைந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு செய்தியின் வழியே கூறியுள்ளார்.

1945-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 6-ஆம் தேதி, ஹிரோஷிமா நகரின் மீது, அமெரிக்க ஐக்கிய நாடு மேற்கொண்ட அணுகுண்டு தாக்குதலையடுத்து, இவ்வாண்டு, அந்நகரில் கடைப்பிடிக்கப்படும் 75-ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளில் பங்கேற்போருக்கென தன் வணக்கத்தைக் கூறியுள்ள திருத்தந்தை, இச்செய்தியை, ஹிரோஷிமா ஆளுநர், Hidehiko Yuzaki அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில், ஜப்பான் நாட்டுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட வேளையில், ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இருநகரங்களிலும் அமைந்துள்ள அமைதி நினைவிடங்களில் தான் செலவிட்ட நேரங்களை, இச்செய்தியின் துவக்கத்தில் திருத்தந்தை நினைவுகூர்ந்தார்.

அமைதியின் திருப்பயணியாக தான் ஜப்பானுக்கு வந்திருந்ததாகவும், அந்த அமைதியை, ஜப்பான் மக்கள் அனைவருக்கும், குறிப்பாக, அமைதியை அதிகம் விரும்பும் இளையோருக்கு வழங்க விழைவதாகவும், திருத்தந்தை கூறியுள்ளார்.



இந்தக் கொடுமையை முதன்முதல் அடைந்து, இன்று வரை உயிர்வாழும் ஹிபாகுஷா குழுவைச் சார்ந்தவர்கள், நமக்கு ஒரு தொடர் நினைவுறுத்தல்களாக உள்ளனர் என்று இச்செய்தியில் இறுதியில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகில் ஒப்புரவையும், அமைதியையும் கொணர பாடுபடும் அனைவருக்கும் "என் சகோதரர் சார்பிலும் என் நண்பர் சார்பிலும் உன்னை வாழ்த்துகின்றேன்: 'உங்க ளுக்குள் சமாதானம் நிலவுவதாக!'" (திருப்பாடல் 122:8) என்ற விவிலியச் சொற்களை, இச்செய்தியின் இறுதியில் கூறியுள்ளார்.

## 168 சமுதாயப்பணி திட்டங்களுக்கு திருத்தந்தையின் நிதியுதவி

திருத்தந்தையின் சார்பில் முன்னெடுக் கப்படும் தர்மப்பணிகளின் ஒரு பகுதியாக, இலத்தீன் அமெமரிக்கா, மற்றும் கரீபியன் பகுதிகளில் உள்ள 23 நாடுகளில், 168 சமுதாயப்பணி திட்டங்களுக்கு திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் உதவிகளை வழங்கியுள்ளார்.



ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத் திருப்பீட அவையின் ஒரு பகுதியாக இயங்கும், 'மக்களின் முன்னேற்ற அறக்கட்டளை' என்று பொருள்படும் 'Populorum Progressio Foundation' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள், இலத்தீன் அமெரிக்காவிலும், கரீபியன் பகுதிகளிலும், அதிகத் தேவையில் இருக்கும் வறியோர் நடுவே மக்கள் முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கோவிட்-19 கொள்ளைநோயின் தாக்கத்திற்கு ஒரு நடவடிக்கையாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பரிந்துரையால், ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத் திருப்பீட அவை உருவாக்கியுள்ள 'கோவிட்-19 செயல்குழு', மக்களின் முன்னேற்றத்தை மையப்படுத்தி 138 திட்டங்களையும், மக்களின் பசிபோக்கும் 30 பணிகளையும் துவக் கியுள்ளது.

இத்திட்டங்களைக் குறித்து, ஜூலை மாத இறுதியில் நடைபெற்ற ஒரு கருத் தரங்கில், ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத் திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள் பேசுகையில், 'Populorum Progressio' அறக்கட்டளை ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டினார்.

இத்தாலிய ஆயர் (திருத்தந்தை) பேரவை வழங்கும் நிதி உதவியுடன் 'Populorum Progressio' அறக்கட்டளை, பழங் குடியினரின் வாழ்வுத் தரத்தை உயர்த்தும் பல்வேறு பணிகளைத் துவக்கியுள்ளது.

அமெரிக்க கண்டத்தில் நற்செய்தி அறிவிப்புப்பணி துவக்கப்பட்ட 5-ஆம் நூற்றாண்டை சிறப்பிக்கும் வண்ணம், 1992-ஆம் ஆண்டு, திருத்தந்தை புனித 2-ஆம் யோவான் பவுல் அவர்களால் உருவாக்கப்பட்ட 'Populorum Progressio' அறக்கட்டளை, கொலம்பியா நாட்டின் பொகோட்டாவில் (Bogot) தன் செயலகத்தைக் கொண்டு பணியாற்றி வருகிறது.

## கல்லறையிலும் வீட்டிலும், இறந்தவர்களுக்குப் படையல் வைத்து மரியாதைச் செலுத்துவது அல்லது வழிபடுவது சரியா?

நமது கல்லறைகளிலும் வீடுகளிலும் சிலர் இறந்தவர்களுக்கு அவர்கள் விரும்பி உண்ட உணவைப் படைக்கிறார்கள் என்பது உண்மை. சிலர் மதுபானங்களையும் படைக்கிறார்கள். சிலர் கல்லறை திருநாள் அன்றும் கல்லறைகளில் இதுபோன்று உணவு பண்டங்களை வைப்பதுண்டு. கிறிஸ்தவ நம்பிக்கையின், இறையியலின் அடிப்படையில் இது சரியா, தவறா என்று சிந்திக்க வேண்டும்.

கல்லறைகளில் மலர்கள் சாற்றுகிறோம். அது இறந்தவர் மட்டில் நாம் கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாடு. இதற்கு மேலாக வேறு அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இன்று இது அனைத்து சமயத்தாரும் ஏற்று, பின்பற்றுகின்ற ஒரு கலாச்சாரமாக மாறிவிட்டது. இதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இறந்தவரின் உடலுக்கோ அல்லது ஆன்மாவுக்கோ உணவு தேவையில்லை என்பது வெள்ளிடைமலை.

கல்வியறிவும் மறையறிவும் குறைந்திருந்த முற்காலத்தில், கல்லறைகளில் வைக்கப் படும் உணவு பண்டங்களை அங்குள்ள புழு, பூச்சிகள், எறும்புகள், பறவைகள் உண்ணும் போது, அவற்றை இறந்தவர்களே உண்டதாக நம்பினர். இதன் அடிப் படையில் கல்லறைகளில் படையல்கள் வைத்தார்கள். சீனர் மத்தியிலும் இந்த பழக்கம் உண்டு.

நமது முன்னோர்கள் அத்தகைய சமய நம்பிக்கைக் கொண்டவர்களாக இருந்த படியால் அவர்களை நாம் குறைகூற இயலாது. ஆனால், இயேசுவை ஆண்டவராக ஏற்று திருமுழுக்குப் பெற்ற பின்னரும் அதே பழக்கவழக்கத்தைத் தொடர்வது முற்றிலும் தவறு.

இயேசு பார்வையற்றோர் பார்வை பெற வந்தார். (லூக்கா 4:18) இதன் பொருள், அறியாமையிலிருந்தும் மூடநம்பிக்கை களிலிருந்தும் நம்மை விடுவிக்க வந்தார் என்பதாகும். இன்று இறைவார்த்தையை நாம் ஒவ்வொரு நாளும் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம். இறைவன் நம்மோடு உரையாடி உறவாடுகிறார். உண்மையை உரைத்து நமது மடமையை நீக்குகிறார். நாம் ஒளியின் மக்கள்.

இறந்தோருக்குத் தேவை உணவு அல்ல. எனவே படையல் வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. மாறாக, ஆன்மாக்கள் பாவங்களிலிருந்து விடுதலைப்பெற்று, நிலைவாழ்வை விரைவில் அடைய வேண்டும் என்பதற்கு, இறைவனின் தயவுக்காக மன்றாட வேண்டும். இதற்கு மூன்று சிறந்த வழிகள் உண்டு.

**I. இறந்தோருக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பது.**

2 மக்கபேயர் 12:45-ல், 'இறைப்பற்றுடன் இறந்தோர் சிறந்த கைம்மாறு பெறுவர் என்று அவர் எதிர்பார்த்திருப்பாரெனில், அது இறைப்பற்றை உணர்த்தும் தூய எண்ணமாகும் ஆகவே இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்,' என்று கூறப்பட்டுள்ளது. இறந்தோரின் ஆன்மாவுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப் பதைவிட மேலான இறைவேண்டலோ செயலோ எதுவுமில்லை.

**2 .குடும்ப இறைவேண்டல்**

அடுத்து, குடும்பமாக இறத்தவரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக வீட்டில் இறைவேண் டல்கள் செய்வது. இறந்தவர் நிலை வாழ்வு பெற்றிட செபமாலை வழி இறைஞ்சி மன்றாடுவது சிறந்த வழிமுறை யாகும். நமது நம்பிக்கையின் படி திருஅவை மூன்று நிலைகளில் உள்ளது.

a)மண்ணகத்தில் ப**யணிக்கும் திருஅவை** (நாம்).

b)**துன்புறும் திருஅவை** (இறந்த பின் இன்னும் கடவுளின் உறைவிடத்தைச் சென்று அடையாத ஆன்மாக்கள்)

c) **மாட்சிபெற்ற திருஅவை** (கடவுளின் உறைவிடமாகிய விண்ணகத்தைச் சென்ற டைந்த ஆன்மாக்கள், புனிதர்கள்)

இவற்றுள் இரண்டாம் நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு நமது தொடர்ச்சியான பரிந்துரை மன்றாட்டுக்கள் அவசியம் தேவை. நாம் படைக்கும் உணவு வகைகள் அல்ல. ஏனெனில், இந்த ஆன்மாக்களால் தங்களுக்கு உதவிட முடியாது. நாம் தான் அவற்றுக்கு உதவ வேண்டும். எனவே இறந்துபோன அனைத்து நம்பிக்கை யாளர்களுக்காகவும் இறைவனின் தயவை வேண்டி இறைவேண்டல் செய்வது நமது கடமை. இதுவே இறந்தோர் மட்டில் நாம் கொண்டிருக்கும் அன்பின் மிகச் சிறந்த வெளிப்பாடு.

**3. இறந்தோர் பெயரில் தர்ம செயல்கள்**

அடுத்து, இறந்தோர் பெயரில் தர்ம செயல்கள் செய்வது. இயன்றவரை இது தொடர வேண்டும். இதனால் இந்த குறிப்பிட்ட ஆன்மாவுக்கு பலன் கிட்டும்.

இவை மூன்றும் இறந்தோரின் ஆன்மாவுக்கு இறைவனின் தயவைத் தேடிக்கொடுக்கும் என்பது திண்ணம். கிறிஸ்தவ நம்பிக்கை யில் மூட நம்பிக்கைக்கு இடமில்லை. எது சரி, எது தவறு என்று அறிந்த பின்னரும் மூடநம்பிக்கை கொண்ட செயல்களில் ஈடுபட்டால் அது தூய ஆவியாருக்கு எதிராகச் செய்யும் குற்றமாகும். அதற்கு மன்னிப்பு கிடைக்காது என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. (காண்க மத் 12: 31-32)

எனவே, கல்லறையில் படையலிடுவதைத் தவிர்த்து இறந்தவரின் கல்லறையில் நின்று, "பெயர்__________, இவரின் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாறக்கடவதாக. முடிவில்லா ஒளி இவர் மேல் ஒளிர்வதாக" என்று இறைவனை மன்றாடுவது மேலானது.

-ஆர்.கே.

## 'அனைவருக்கும் அருள் வழங்கும் ஆண்டவர்' (ஞாயிறு சிந்தனை)

பொதுக்காலம் இருபதாம் ஞாயிற்றுக் கிழமையான இன்று நாம் கேட்கும் வாசகங்கள் தரும் சிந்தனை 'இறைவன் அனைவருக்குமானவர்' என்பதாகும். கடவுள் எல்லா மக்களுக்கும் பொது வானவர். ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும் அவர் உரியவர் அல்ல என்பது தெளிவாகிறது.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் பிற இன மக்களைக் குறித்துக் "அவர்களை நான் என் திருமலைக்கு அழைத்து வருவேன்; இறைவேண்டல் செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச் செய்வேன்' என்கிறார். இங்கே கடவுள், யூதர்கள் மட்டுமல்ல பிற இனத்தார் எழுப்பும் இறைவேண்டல் களையும் கேட்பார் என்றும், அவர் தங்கியிருக்கும் ஆலயம் எல்லா மக்களுக்கும் உரிய இறை இல்லம் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். ஆகவே, கடவுளை - அவர் வாழும் ஆலயத்தை - ஒரு குறிப்பிட்ட சமூகத் திற்கு அல்லது பிரிவினருக்கு மட்டும் சொந்தம் கொண்டாடுவது மடமை என நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சாலமோன் அரசர் எருசலேம் திருக்கோவிலைக் கட்டிமுடித்த பின்பு 'இஸ்ரயேல் மக்களைச் சாராத அன்னியர் ஒருவர் உமது பெயரை முன்னிட்டுத் தொலை நாட்டிலிருந்து வந்து, மாண்புமிக்க உமது பெயரையும், வலிமை வாய்ந்த உமது கையையும், ஆற்றல் மிகுந்த உமது புயத்தையும் பற்றிக் கேள்விப்பட்டு வந்து, இந்த கோவிலை நோக்கி வேண்டுதல் செய்தால், உமது உறைவிடமாகிய விண்ணிலிருந்து நீர் அவருக்குச் செவிசாய்த்து அந்த அன்னியர் கேட்பதை அருள்வாயாக" என்று ( 1 அர 8: 41- 43). இறைவேண்டல் செய்தார். ஆதலால்தான் இயேசு கிறிஸ்து எல்லாருக்கும் பொதுவான எருசலேம் ஆலயத்தை ஒரு குறிப்பிட்ட இனத்தவர் (சதுசேயர்) சொந்தம் கொண்டாடிய போது, அவர்களை விரட்டியடித்து இறைஇல்லம் எல்லாருக்கும் பொது வானது என்பதை வெளிப்படுத்தினார்.

இன்று நாம் படிக்கக்கேட்ட நற்செய்தி கூட இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் பொதுவானவர் என்பதை உறுதிச் செய்கிறது.. இயேசு புறவினத் தார் அதிகமாக வாழும் தீர், சீதோன் ஆகிய பகுதிகளுக்குச் செல்கிறார். அங்கேதான் கானானியப் பெண்மணி ஒருத்தி பேய்பிடித்து கொடுமைக்குள்ளாகி இருக்கும் தன்னுடைய மகளைக் குணப்படுத்தும்படி கேட்கின்றார். கானானியப் பெண் கானானியர் வழிமரபைச் சேர்ந்தவள். இஸ்ரயேலருக்கும் கானானியருக்கும் ஆகாது. இஸ்ரயேலர் கானானியரை நாயிக்கு ஈடாகக் கருதி அவர்களை மதிப்பதில்லை. இதன் அடிப்படையில்தான் இயேசுவும் கானானியப் பெண்ணிடம். இஸ்ரயேலர் நாய் எனும் மதிக்கும் உனக்கு எப்படி உதவுவது என்ற பொருளில் அப்பெண்ணை விலக்குகிறார். இயேசுவின் இவ்வார்த்தை களை மேலோட்டமாகப் பார்க்கும்போது சற்றுக் கடினமாக இருந்தாலும், அவர் அப்பெண்ணின் நம்பிக்கையை சோதிப் பதற்காகக்கூட இப்படிப் பேசியிருக்கலாம் என புரிந்துகொள்ளலாம். ஆனாலும் அப்பெண்மணி இயேசுவின்மீது உறுதியான நம்பிக்கையோடு இருந்தததால் அவளு டைய மகளுக்கு நலமளிக்கிறார். இங்கே இயேசு தான் ஒரு யூதன் என்பதையும் கடந்து, புறவினத்துப் பெண்மணியின் மகளுக்கு நலமளித்து தான் எல்லாருக்கும் பொதுவானவர், மேலும் நம்பிக்கையோடு கேட்டால், கேட்கிற வரங்களை அள்ளித்தருபவர் என்பதை எண்பித்துக் காட்டுகின்றார்.

இப்பகுதி இயேசுவின் பரந்த உள்ளத் தினைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில் கானானியப் பெண்மணியின் நம்பிக்கையை நமக்கு எடுத்துரைக்கிறது. கானானிய பெண்மணியோ இயேசு தன்னைக் கண்டுகொள்ளாவிட்டாலும், தன்னை அவர்



நாயென அழைத்த பின்பும் அவள் தன்னுடைய நம்பிக்கையில் உறுதியாக இருக்கிறார். அவள் கோபங்கொள்ள வில்லை. அதனால்தான் தன்னுடைய மகளது நோய் நீங்கப் பெறுகிறார்.

பல சந்தர்ப்பங்களில் இறைவனை நோக்கிய நம்முடைய இறைவேண்டல்கள் கேட்கப்படவில்லையென்றால் நாம் நம்பிக்கையில் தளர்ச்சியுறுகிறோம். ஆனால் தளராத நம்பிக்கைதான் இயேசுவிடமிருந்து எல்லா ஆசிரையும் பெற்றுத் தரும் என்பது உறுதி

அடுத்து, பிறர் நம்மை தாழ்வாக எண்ணினாலும் ஆத்திரம் கொள்ளாது பொறுமை காக்க வேண்டும். இறைவன் அனைத்தையும் அறிபவர். அவரது தயவும் இரக்கமுமே மேலானது என்பதை ஏற்று வாழ்வது இன்றியமையாதது.

*-ஆவி.டேவின், குளுவாங்*

**பொதுக்காலம் 20-ஆம் ஞாயிறு**

எசா 56: 1, 6-7
திபா 67: 1-2. 4. 5,7
உரோ 11: 13-15, 29-32
மத் 15: 21-28

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**

## துன்புறும் படகாக திருஅவை

கடந்த வார ஞாயிறு நற்செய்தியில் புயலின் நடுவே பயணம் செய்த படகு, திருஅவையின் அடையாளமாக உள்ளது என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு காலத்திலும், துன்பங்களையும் துயர்களையும் எதிர்கொண்டுவரும் திருஅவை, இன்றும் சில இடங்களில் பல்வேறு துயர்களை அனுபவித்துவருகிறது என்று எடுத்துரைத்தார்.

இவ்வாறு துயர்களை அனுபவிக்கும்போது, இறைவன் நம்மை கைவிட்டுவிட்டாரோ என்ற சந்தேகம் திருஅவைக்கு எழலாம், ஆனால், இத்தகைய நேரங்களில்தான் நம் விசுவாசம், நம்பிக்கை, மற்றும், அன்பின் சான்றுகள் அதிகம் அதிகமாக ஒளிர்விடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## திருத்தந்தைக்கு ஆப்ரிக்க தாயின் கடிதம்

மத்திய ஆப்பிரிக்கக் குடியரசைச் சேர்ந்த Hermine Nzotto என்ற பெண்மணிக்கு தலை ஒட்டியேப் பிறந்த இரு பெண் குழந்தைகளை உரோம் நகருக்கு கொணர்ந்து, 'குழந்தை இயேசு' மருத்து வமனையில் அறுவை சிகிச்சை வழியாகப் பிரித்து அவைகளை உயிர் பிழைக்கச் செய்யப்பட்டது.



இந்த அறுவைச் சிகிச்சைக்கு நிதி உதவி வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அந்தத் தாய் நன்றி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.